

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (13.3.2025) தலைமைச் செயலகத்தில், ஜாக்டோ ஜியோ சங்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர்கள் சந்தித்து, நாளை தமிழ்நாடு அரசின் 2025–26 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுவதையொட்டி, தங்களது கோரிக்கைகளை தெரிவித்தனர். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் எ.வ. வேலு, தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (13.3.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழக மாணவர் அணிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள வழக்கறிஞர் இரா. ராஜீவ்காந்தி மாணவர் அணி நிர்வாகிகளுடன் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

### அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு முன்னேறியதாக

# எடப்பாடி பழனிச்சாமி சொல்வதற்கு வெட்கப்பட்டிருக்க வேண்டும்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!



சென்னை, மார்ச் 14-

அதிமுக ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு முன்னேறியதாகச் சொல்லும்போது எடப்பாடி பழனிச்சாமி யோசித்திருக்க வேண்டும் அல்லது சொல்வதற்கு வெட்கப்பட்டு இருக்க வேண்டும் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் காட்டமான பதில் அளித்துள்ளார்.

இது குறித்து அவரது பேட்டி வருமாறு:-

எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் சொல்வதற்கு முன்னால் கொஞ்சம் யோசித்திருக்க வேண்டும் அல்லது சொல்லும்போது கொஞ்சம் வெட்கப்பட்டாவது இருக்க வேண்டும், காரணம், அவர்களுடைய 10 ஆண்டுகால ஆட்சி என்பது தமிழ்நாட்டினுடைய ஒரு இருண்ட கால ஆட்சி என்றே எடுத்துக்கொள்ளலாம்.

2007ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சென்னையின் போக்குவரத்து நெரிசலுக்கு விடைகாணுகிற வகையில் அன்றைய ஒன்றிய பிரதமர் மன்மோகன் சிங், ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தலைவராக இருந்த சோனியா அம்மையார் இவர்களை எல்லாம் அழைத்து வந்து சென்னை துறைமுகத்தில், ஒரு மிகப் பெரிய அளவிலான திட்டம் அதாவது மதுரவாயில் முதல் துறைமுகம் வரை, ஒரு நீண்ட மேம்பாலம் 19 கிலோமீட்டர் தூரத்திற்கு அமைப்பதற்கு நடவடிக்கை மேற்காண்டார்.

இந்த 19 கிலோ மீட்டர் தூரத்திற்கான நீண்ட மேம்பாலம் 1.5 கிலோமீட்டர் தரைவழி, 17.5 கிலோ மீட்டர் ஆகாய வழி. அந்த பாலம் கட்டுவதற்கு ரூ.1,655 கோடி செலவில் அன்றைக்கு பணிகளை தொடங்கினார். பணிகள் வேகமாக நடைபெற்று 25 சதவீத பணிகள் முடிவுற்று தூண்கள் எல்லாம் சாட்சிகளாக நின்றுகொண்டிருக்கிறது.

இந்த நிலையில் 2011-ஆம் ஆண்டு, ஆட்சி பொறுப்புக்கு வந்த நினைவில் வாழும் ஜெயலலிதா அம்மையார் அவர்கள், நீர் நிலைகளில் தூண்களை அமைத்துவிட்டார்கள் என்கின்ற ஒரு பொய்யான, பொருந்தாத காரணங்களை சொல்லி அந்த பணிக்கு முட்டுக்கட்டை போட்டார். முட்டுக்கட்டை போட்டதன் விளைவு, மதுரவாயல் முதல் துறைமுகம் வரையிலான மிக நீண்ட மேம்பாலம் கட்ட முடியாமல் போய் விட்டது. அதற்கு உண்மையான காரணத்தை மாநகர மக்கள் நன்கறிவார்கள்.

அந்த பாலம் அமைந்திருந்தால், 17.5 கிலோ மீட்டருக்கான ஆகாய வழி மேம்பாலம் அமைந்திருந்தால் கலைஞருக்கு பெரிய அளவிலான நற்பெயர் சேர்ந்திருக்கும். இந்தியாவிலேயே நீண்ட ஆகாய வழி மேம்பாலத்தை கட்டிய பெருமைக்குரியவர் கலைஞர் என்கின்ற நற்பெயர் அவருக்கு போய்விடக் கூடாது என்பதற்காகவே அந்த பாலத்தை ஜெயலலிதா அம்மையார் நிறுத்தினார்.

அதன்பிறகு வந்த எடப்பாடியும், அதில் இருக்கிற உண்மைத்தன்மையை கண்டறிந்து, அந்த பாலம் கட்டுவதற்குரிய எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. முதலமைச்சர் அவர்கள் 2022-ஆம் ஆண்டு ஒன்றிய அரசிடம் தொடர்ந்து பேசி இந்த பாலம் அமைய வேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறி, இப்போது ரூ.5,611 கோடியில் ஈரடுக்கு மேம்பாலம் கட்டுவதற்கான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

ஆகவே ரூ.1,655 கோடியில் கட்டப்படவேண்டிய பாலம், ரூ.5,611 கோடி அளவிற்கு கட்டுவதற்குரிய நிலை ஏற்பட்டு, இவ்வளவு பொருளாதாரம் வீணடிக்கப்பட்டதற்கு எடப்பாடி பங்கேற்றிருந்த அதிமுக காரணம் அல்லவா. அவர் எங்கள் ஆட்சி காலத்தில்தான் தமிழ்நாடு முன்னேறியது என சொன்னால் அவர் கொஞ்சம் யோசித்து, அறிக்கையை அல்லது பேட்டியை தந்திருக்க வேண்டும்.

இன்னொன்று 2017-ஆம் ஆண்டில்தான் "உதய் மின் திட்டத்தில்" இவர்கள் இணைந்தார்கள். உதய் மின் திட்டத்தில் இவர்கள் இணைந்ததால் தான் இன்றைக்கு மின் கட்டணம் என்பது தொடர்ச்சியாக உயர்ந்துக்கொண்டிருக்கிறது. அதேபோல் 2017-2018-ஆம் ஆண்டுகளில்தான் நீட் தேர்வுக்கு இவர் ஒப்புதல் அளித்தார்கள். நீட் தேர்வுக்கு ஒப்புதல் அளித்த காரணத்தினால் தான் 40க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் மடிந்துபோனார்கள்.

இந்த நிலைகளை எல்லாம் மறைத்துவிட்டு, ஏதோ அவருடைய ஆட்சி மிகப்பெரிய அளவில் தமிழ்நாட்டிற்கு ஒரு விடியல் தந்த ஆட்சி என்பதை போன்ற தோற்றத்தை இப்போது சொல்வது என்பது, மக்கள் அந்த காலத்தின் அவலங்களை மறந்து விட்டார்கள் என்று மனதில் நினைத்துக்கொண்டு சொல்வது நிச்சயம் மாநகர மக்கள் மறதிக்குள்ளானவர்கள் அல்ல. மாநகர மக்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டு மக்களுக்கு எடப்பாடியின் நிர்வாகத்திறமை மிக நன்றாக தெரியும்.

இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொருப்பேற்ற இந்த 4 ஆண்டுகளில், அவர் செய்திருக்கின்ற சாதனைகளில் ஒன்று காலை உணவுத் திட்டம். காலை உணவு திட்டத்தை இந்தியாவில் இருக்கின்ற மற்ற மாநிலங்கள் அதை நகலெடுத்து செய்வது என்பதையும் கடந்து, வெளிநாடுகளில் இருப்பவர்களும் அதை நகலெடுத்து செய்து கொண்டிருக்கிறார்கள். கனாடா, இலங்கை போன்ற நாடுகள் காலை உணவு திட்டத்தை அவர்கள் செயல்படுத்த தொடங்கியிருக்கிறார்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம், முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த மகத்தான திட்டத்தை இன்றைக்கு ஹரியானா, டெல்லி, மஹாராஷ்டிரா, தெலுங்கானா, கர்நாடகம் போன்ற பல்வேறு மாநிலங்கள் நகலெடுத்து அந்த அறிக்கையைத் தந்து, அவர்களும் நாங்கள் இதை செயல்படுத்துகிறோம் என்று சொல்லி எல்லா மாநிலங்களிலும் அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு இந்த திட்டம் இன்றைக்கு துணையாக இருந்து கொண்டிருக்கிறது.

முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன், அதேபோல் இன்றைக்குபுதுமைப்பெண் போன்ற இந்த மூன்று திட்டங்களினால் மாணவர்கள் உயர்கல்வியில் சேரும் எண்ணிக்கை என்பது அதிகளவில் உயர்ந்து, இந்தியாவிலேயே அதிக அளவில் உயர்கல்விக்கு மாணவிகளும், மாணவர்களும் செல்லும் நிலை என்பது ஏற்பட்டிருக்கிறது. இப்படி இன்றைக்கு தமிழ்நாடு எல்லா துறைகளிலும் முன்னிலையில் இருக்கிறது என்று சொன்னால் அதற்கு முழு காரணம் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிகாலத்தில் அவர் கொண்டுவந்த திட்டங்கள் தான்.

முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு கொண்டு வந்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற திட்டங்கள் தான் என்பதை மக்கள் நன்றாக அறிவார்கள். இதை மறைப்பதற்கு எடப்பாடி பழனிச்சாமி போன்றவர்கள் எத்தனை ஜமக்காலங்களை கொண்டு வந்தாலும் இதை மூட முடியாது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



முதலமைச்சர் அவர்களால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ள சென்னை, போரூர், டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஈரநில பசுமை பூங்காவை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் டாக்டர் சௌமியா சாமிநாதன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர். உடன் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., உயரதிகாரிகள் காகர்லா உஷா, அ.சிவஞானம், எஸ்.ருத்ரமூர்த்தி, மா.பாலமுருகன், மண்டலக் குழுத்தலைவர் நொளம்பூர் ராஜன், ஹேமலதா கணபதி உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

### மேட்டூர் அருகே விபத்து:

# உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிதி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 14-

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், வெள்ளார் கிராமத்தில் பணியின்போது தவறி விழுந்து உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், வெள்ளார் கிராமம், அரசமரத்தூர் பகுதியைச் சேர்ந்த சுப்ரமணி (வயது 55) என்பவர் நேற்று காலை (13.3.2025) வெள்ளார் பஞ்சாயத்து அலுவலகம் சார்பில் எருமப்பட்டி, காட்டுவளவு என்ற இடத்தில் புதிதாக வேலை நடைபெற்று வரும் தண்ணீர் தொட்டியின் மீது ஏறி பணி செய்துகொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக தவறி விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த சுப்ரமணி அவர்களின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### பாரத சாரணியர் இயக்கத்தின் வைர விழா!

# மிகப்பெரிய வெற்றி பெற வைத்தமைக்கு நன்றி!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு – பாரத சாரண சாரணியர் இயக்க தேசிய முதன்மை ஆணையர் கடிதம்!



சென்னை, மார்ச் 14-

பாரத சாரணியர் இயக்கத்தின் வைர விழாவை மிகப்பெரிய வெற்றி பெற வைத்த பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு பாரத சாரண சாரணியர் இயக்க தேசிய முதன்மை ஆணையர் கே.கே.கண்டேல்வால் நன்றி தெரிவித்து கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்து அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு அவர் எழுதியுள்ள கடிதம் வருமாறு:

பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் வைர விழா பெருந்திரளணி நிகழ்வை மிகப்பெரிய அளவில், மறக்கவியலாத வெற்றி பெறவைத்த தங்களது தலைசிறந்த தலைமைப் பண்புக்கும் அயராத அர்ப்பணிப்புக்கும் 63 இலட்சம் பாரத சாரண சாரணியர்களின் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

28 ஜனவரி 2024 முதல் 3 பிப்ரவரி 2025 வரை திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற இந்நிகழ்வு, அதில் கலந்துகொண்ட ஒவ்வொரு பங்கேற்பாளரின் நெஞ்சிலும் சிந்தையிலும் என்றென்றும் நினைத்து மகிழத்தக்கதாகப் பதிந்துவிட்டது. அதற்காகத் தங்களது தொலைநோக்கு மிகுந்த வழிநடத்தலுக்கு எனது நன்றிகள்.

தங்களது சீரிய தலைமையில், இந்தப் பெருந்திரளணி பாரத சாரண சாரணிய வரலாற்றில் ஒரு மைல்கல்லாக மட்டுமில்லாமல், அர்ப்பணிப்பு, கூர்ந்த திட்டமிடுதல் மற்றும் ஒருங்கிணைப்பு எவ்வாறு ஒரு கனவை நனவாக்க முடியும் என்பதற்கான ஒளிரும் எடுத்துக்காட்டாக மாறியுள்ளது. துல்லியமான ஏற்பாடுகள் மற்றும் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள், எங்கள் இளம் பங்கேற்பாளர்களுக்கு இனிமையான மற்றும் பயனுள்ள அனுபவத்தை வழங்க உதவின.

இந்தப் பெருந்திரளணி நிகழ்வில் பாதுகாப்பு, காவல், நீர், சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வதில் தங்கள் அர்ப்பணிப்பானது நிகழ்வின் ஒவ்வொரு நிலையிலும் வெளிப்பட்டது; இதில் பங்கேற்ற அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் சூழலை உருவாக்கியது. எவ்வளவு சிறியதானாலும், ஒவ்வொரு விஷயமும் மிகுந்த கவனத்துடனும் துல்லியத்துடனும் கவனித்துக்கொள்ளப்பட்டது.

இந்த அளவுக்கான கவனமும் திட்டமிடப்பட்ட அணுகுமுறையும், எங்கள் இளம் சாரண சாரணியர் நலனுக்கான தங்கள் ஆழமான அக்கறையையும், அவர்களுக்குச் மிகச் சிறந்த அனுபவத்தை வழங்குவதற்கான உங்கள் அர்ப்பணிப்பையும் காட்டுகிறது.

தங்கள் தலைமையில் நடைபெற்ற வைர விழா பெருந்திரளணி எதிர்கால நிகழ்வுகளுக்கு புதிய அளவுகோல்களை நிர்ணயித்தது மட்டுமில்லாமல், வரவிருக்கும் ஆண்டுகளில் இன்னும் பெரிய சாதனைகளை எட்டுவதற்கான அடிப்படையாகவும் அமைந்துள்ளது. இந்த நிகழ்வு சாரண இயக்கத்தினரை மேலும் நெருக்கமாக இணைத்துள்ளது; இது எதிர்காலத் தலைமுறையினரை உயர்ந்த இலக்குகளை நோக்கி முன்னேறத் தூண்டும் என்று உறுதியாக நம்புகிறோம்.

மீண்டும் ஒரு முறை தங்களுக்கும், தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்த தங்களது அர்ப்பணிப்பு மிகுந்த குழுவினருக்கும், தமிழ்நாடு அரசுக்கும், தமிழ்நாடு மாநிலத்தைச் சேர்ந்த பாரத சாரண சாரணிய இயக்கத் தன்னார்வலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த நிகழ்வின் வெற்றிக்குத் தங்களது கூட்டு முயற்சி, அர்ப்பணிப்பு, ஆர்வம் ஆகியவைதான் மிக முக்கியக் காரணிகளாக அமைந்தன. தங்களது விலைமதிக்க முடியாத பங்களிப்புகளுக்கு நான் மிகுந்த நன்றிக்கடன் பட்டுள்ளோம்.

இவ்வாறு அவர் தமது கடிதத்தில் கூறியுள்ளார்.

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எம்.இ.சேகர் தலைமை!

# சென்னை கிழக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

## அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் – நடிகர் ராஜேஷ் – கவிஞர் பா.விஜய் சிறப்புரை!

சென்னை, மார்ச் 14-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனித நேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 20, தமிழ்த்தாயின் மகன் ஆளட்டும்! கலைத்தாயின் புகழ் ஓங்கட்டும்!! எனும் தலைப்பில் அம்பத்தூர் தெற்கு பகுதியில் மாபெரும்புகழரங்கம் 13.03.2025 வியாழன் அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, முகப்பேர் மெயின்ரோடு. சின்னசாமி திருமணமண்டபத்தில் நடைபெற்றது.



இப்புகழரங்கத்தில் வட்டக்கழகச் செயலாளர், வரிவிதிப்பு (ம) நிதிக்குழு உறுப்பினர் எம்.இ.சேகர் தலைமை வகிக்க, கழகப் பொருளாளர், கழக நாடாளுமன்ற குழுத்தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி, சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே. மூர்த்தி எம்.சி, டி.எஸ்.பி. இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், வி. ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, எல்.பி.எப். மோகன், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி, டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி, ஜி.வி.நாகவள்ளிஎம்.சி, வானவில் விஜய், து.ஆயிரம், கு.கிருஷ்ணமூர்த்தி ஜெ.பாலமுருகன், மரு. எம்.இ.எஸ்.சந்தீப், டி.ஶ்ரீதர், ஏ.என்.ஆர்.செந்தில்குமார், எம்.இ.எஸ். சந்தோஷ், கே.பிரபு முன்னிலையில், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், நடிகர் ராஜேஷ், கவிஞர் பா.விஜய் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மு.ராஜேந்திரன், சி.வி. ஆறுமுகம், திலகம் மணியரசன், ஆசை இராஜா, எம். பி.கண்ணன், எம்.ஏ. குட்டி, எம்.பி.கணபதி, ஆர்.எஸ்.அர்ஜீனன் வி.ஞானசேகர், ஜி.சோமசுந்தரம், ப.முருகேசன், எஸ்.ஆதிமூலம், எம்.செந்தில்குமரன் வரவேற்றனர்.

மேலும், இப்புகழரங்கத்தில் சென்னை பெருநகர மேயர் பிரியாராஜன், சன்.முனியாண்டி, மாமன்ற உறுப்பினர்கள்: சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஶ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமார், ஜி. வி.நாகவள்ளி, கே.சாரதா, டி.யோகபிரியா, எம். தாவூத் பீ, பி.அமுதா, சி. ஶ்ரீதணி, உஷாநாகராஜ், கே.பொற்கொடி, ச.தமிழ் செல்வி. அம்பத்தூர் வடக்கு/தெற்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதா கிருஷ்ணன், மு.இரக, த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி. சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு. விஜயகுமார், த.வ. லால், பி.செந்தில் மற்றும் கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வட்ட துணை செயலாளர் என்.பாலசந்தர் நன்றி கூறினார்.